# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

## அசல் வழக்கு எண். 32/2024

வா.சா.1 - நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை - நாள் 22-01-2026

பெயர் = அழகுத்தாய் வா.சா.-1

வா.சா.-1நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.-

(1) தாவா சொத்தும் அதை சார்ந்த மொத்த சொத்தும் குன்னம்மாள் என்பவருக்கு கிரையப்பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி குன்னம்மாள் என்பவருக்கு எல்லம்மாள் என்ற மகளும், ராமசாமி, திருவேங்கடம் என்ற இரு மகன்களும் உள்ளனர் என்றால் சரிதான். மேற்படி ராமசாமி தான் இவ்வழக்கின் பிரதிவாதி என்றால் சரிதான். திருவேங்கடம் என்பவர் என்னுடைய கணவர் என்றால் சரிதான். எல்லம்மாள் என்பவருக்கு இரண்டு மகள்கள் உள்ளனர் என்றால் சரிதான். எல்லம்மாள்பற்றிய விவரமோ அவரது வாரிசுகள் பற்றிய விவரமோ எனது பிராதில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எல்லம்மாள் பற்றிய சங்கதிகளை நான் இவ்வழக்கில் மறைத்துள்ளதால் தூய கரங்களுடன் இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

(2) எத்தனை வருடங்களாக நான் வெள்ளாகுளத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் 7,8 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். தாவா சொத்தில் நான் குடியிருந்து வருவதற்கான குடும்ப அட்டையையோ, ஆதார் அடையாள அட்டையையோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனது விலாசத்தை பந்தல்குடியிலிருந்து வெள்ளாகுளத்திற்கு மாற்றிவிட்டேன். தாவா சொத்தில் நான் குடியிருந்து வரவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர்,மாமனார், மாமியார் ஆகியோர்கள் எந்த தேதியில் இறந்தார்கள் என்ற விவரத்தை நான் எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான், தேதி தெரியாது.

(3) தாவா சொத்து மற்றும் அதனைசார்ந்த மொத்த சொத்தையும் எனது கணவரும், பிரதிவாதியும் எந்த தேதியில் எங்கு வைத்து யார் முன்னிலையில் பாகம் பிரித்து கொண்டார்கள் என்ற விவரத்தை எனது பிராதில் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பாக விவரங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் உயிருடன் இருந்தவரைக்கும் மேற்படி பாகம் சம்மந்தமாக பிரதிவாதியுடன் சேர்ந்து ஆவணம் எதுவும் எழுதவில்லை என்றால் சரிதான். குன்னம்மாளின் மகள் இருக்கும்வரை எனது கணவரும் பிரதிவாதியும் பாகம் பிரித்து கொள்வதற்கு வாய்ப்பில்லை என்றால் குன்னம்மாளின் மகள் எனது கணவரும் பிரதிவாதியும் பாகம் பிரித்துக்கொள்ள சம்மதித்து பிரித்துக்கொள்ள சொன்னார். மேற்படி விவரத்தை நான் எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரத்தை பின்யோசனையின் பெயரில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(4) தாவா சொத்து சம்மந்தமாக கிரையப்பத்திரம் வா.சா.ஆ.1 ஆவணத்திலும் கதவு எண். 99 என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.தற்போது வரை தாவா சொத்திலுள்ள வீட்டின் கதவு எண்.99 தான் என்றால் சரிதான். தாவா சொத்து என்பது விவசாயபொருட்களை சேர்த்து வைக்க பயன்படுத்தும் ஒரு அறை என்றால் சரிதான். பிரதிவாதி பந்தல்குடி கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்து என்பது பிரதிவாதி விவசாய பொருட்களை வைப்பதற்காக கட்டிய ஒரு அறை என்றால் சரியல்ல. தாவா சொத்திலுள்ள வீட்டிற்கான சாவி தற்போது வரை பிரதிவாதியின் கையில் தான் உள்ளது என்றால் சரிதான்.

(5) தாவா சொத்து சம்மந்தமாக எனது கணவருக்கும், பிரதிவாதிக்கும் இடையில் எவ்வித பாகம் பிரிவினையும் ஏற்படவில்லை என்றும், அதன் அடிப்படையில் தாவா சொத்து எனது கணவருக்கு ஒதுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக பிராதில் கூறியுள்ள வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படாத நிலையிலும், தாவா சொத்து எனது கணவருக்கு ஒதுக்கபடாத நிலையிலும், நான் கோரும் விளம்புகை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நான் குடியிருக்கவில்லை என்பதால் தான் தாவா சொத்து எந்த திசையில் உள்ளது என்பதே தெரியாமல் வழக்கு தாக்கல் செய்து , பின்பு அதனை திருத்தம் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

(6) நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகள், மின்கட்டண ரசீதுகள் அனைத்துமே தாவா சொத்தின் கூட்டுபங்குதாரர் என்ற அடிப்படையில் தான் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகள், மற்றும் மின்கட்டண ரசீதுகள் மட்டுமே வைத்து விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்பதால் மேற்படி பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. வீட்டுவரி ரசீதுகள், மின் கட்டண ரசீதுகள் விவரங்கள் எதுவும் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு எனது கணவர் உயிருடன் இருந்தவரைக்கும் பட்டா எதுவும் பெறவில்லை என்றும், அவர் இறந்தபின்பு எனது பெயரில் பட்டா வாங்க எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

(7) தாவா சொத்து எனக்கும், எனது கணவருக்கும் மட்டும் பாத்தியப்பட்ட சொத்து அல்ல என்பதால் தான் தாவா சொத்திற்கு பட்டா பெறவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் யார் யார் குடியிருந்து வருகிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். யார் யார் குடியிருந்து வருகிறார் என்ற விவரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் நான் அனுபவம் செய்யவில்லை என்பதால் தான் மேற்படி விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

(8) நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகள், மின்கட்டண ரசீதுகள் அனைத்தும் மோசடியானது என்றும், ஆகையால் மேற்படி ரசீதுகள் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தும் அதை சார்ந்த மொத்த சொத்தையும் பிரதிவாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தான் தாவா சொத்தில் எவ்வித உரிமையும் தேவையில்லை என்று விலகி வெள்ளாகுளத்திற்கு சென்றுவிட்டு தற்போது தாவா சொத்தின் மார்க்கெட் மதிப்பு அதிகமாக இருப்பதால் தாவா சொத்தை கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள

வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு எவ்வித வழக்கு மூலமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.01.22 17:28:54 +0530